# கோவிட் 19 தடுப்பூசி பற்றிய தகவல்

டிசம்பர் 2020 முதல், சுவிட்சர்லாந்தில் கோவிட் 19 வைரஸுக்கு தடுப்பூசி போடுவது சாத்தியமாகும். தடுப்பூசி பற்றிய மிக முக்கியமான கேள்விகள் மற்றும் பதில்களை இங்கே காணலாம்.

## நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முறை இதோ.

இந்த தடுப்பூசி வேலை செய்யுமா? மற்றும் இந்த தடுப்பூசி பாதுகாப்பானதா?
ஆம். கோவிட் 19 வைரஸுக்கு எதிராக தடுப்பூசி வேலை செய்கிறது. மேலும் இந்த தடுப்பூசி பாதுகாப்பானது. சிகிச்சை சார்ந்த தயாரிப்புகளுக்கான சுவிஸ் ஏஜென்சி நிறுவனமான, சுவிஸ்மெடிக், இதை கவனமாக ஆய்வு செய்துள்ளது. அதன் பிறகே அது தடுப்பூசிக்கு ஒப்புதல் அளித்தது.

தடுப்பூசி பல்லாயிரக்கணக்கான மக்களிடம் பரிசோதிக்கப்பட்டுள்ளது. ஆய்வுகள் இவற்றை காட்டுகின்றன: இந்த தடுப்பூசி வேலை செய்கிறது. மேலும் இந்த தடுப்பூசி பாதுகாப்பானது. இது வயதானவர்களுக்கும் முன்பே நோய் இருக்கும் நிலைமையை கொண்டுள்ளவர்களுக்கும் கூட வேலை செய்கிறது.

தடுப்பூசி கடுமையான பக்க விளைவுகளுக்கு வழிவகுக்காது. அப்படித்தான் இதுவரை ஆய்வுகள் காட்டியுள்ளன. தடுப்பூசியின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை சுவிஸ்மெடிக் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

முக்கியமானது: தடுப்பூசி போட்ட பிறகு கடுமையான பக்கவிளைவுகள் ஏற்படுவதற்கான ஆபத்து மிகவும் குறைவாகும். கொரோனா வைரஸால் தொற்றுநோய் ஏற்பட்ட பிறகு கடுமையாக உடல்நலம் பாதிக்கப்படுவதற்கான ஆபத்து மிகவும் அதிகமாகும். இதனால்தான் ஃபெடரல் ஆஃபிஸ் ஆஃப் பப்ளிக் ஹெல்த் (எஃப்ஓபீஎச்) சிலருக்கு தடுப்பூசி போடும்படி பரிந்துரைக்கிறது.

யார் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்?
எஃப்ஓபீஎச்-ன் படி, பின்வரும் நபர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்:

1. வயதானவர்கள் மற்றும் முன்பே நோய் இருக்கும் நிலைமைகளை கொண்டவர்கள் போன்ற குறிப்பிட்ட ஆபத்தில் உள்ளவர்கள். முக்கியமானது: கர்ப்பிணிப் பெண்கள் குறிப்பாக ஆபத்தில் உள்ளனர். இருப்பினும், அவர்களுக்கு தடுப்பூசி போடக்கூடாது.
2. நோயாளிகளுடன் தொடர்பு கொண்ட மருத்துவமனைகள் மற்றும் வீடுகளின் ஊழியர்கள். குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய நபர்களைப் பராமரிக்கும் நபர்கள்.
3. குறிப்பிட்ட ஆபத்தில் இருக்கும் நபர்களுடன் ஒரே வீட்டில் வசிக்கும் நபர்கள்.
4. தொற்றுநோய்க்கான ஆபத்து அதிகமாக இருக்கும் பணியிடங்கள், குடியிருப்பு வீடுகள் மற்றும் குடியிருப்பு குழுக்களில் வசிப்பவர்கள். உதாரணமாக, உடல் குறைபாடுகள் உள்ளவர்களுக்கான பணியிடங்களில் அல்லது வீடுகளில் இருப்பவர்கள். மேலும் இந்த பணியிடங்கள், குடியிருப்பு வீடுகள் மற்றும் குடியிருப்பு குழுக்களின் பணியாளர்கள்.
5. தடுப்பூசி போட்டுக்கொள்ள விரும்பும் மற்ற அனைத்து வயதுவந்தவர்களும்.

ஏற்கனவே கோவிட்-19-ஆல் பாதிக்கப்பட்டிருந்தவர்களும் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம். இருப்பினும், தொற்று ஏற்பட்ட மூன்று மாதங்கள் வரை அவர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ளக்கூடாது.

முக்கியமானது: உங்களுக்கு அதிகமான காய்ச்சல் இருக்கிறதா? நீங்கள் நோய்வாய்ப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறீர்களா? அல்லது கொரோனா பரிசோதனையின் முடிவுக்காக நீங்கள் காத்திருக்கிறீர்களா? அல்லது நீங்கள் தனிமைப்படுத்துதலில் (ஐசோலேஷன்) அல்லது ஒதுக்கியிருத்தலில் (குவாரண்டைன்) இருக்கிறீர்களா? அப்படியானால் இப்போது தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டாம். தடுப்பூசிக்கான முன்பதிவை ஒத்திவைக்கவும். ஆனால் முடிந்தவரை சீக்கிரமாக தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள்.

யார் தடுப்பூசி போட்டுக்கொள்ளக்கூடாது?
எஃப்ஓபீஎச் பின்வரும் நபர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்வதை பரிந்துரைக்கவில்லை:

- தடுப்பூசியின் எந்தவொரு உட்பொருளுக்கும் (குறிப்பாக பாலிஎத்திலீன் கிளைகோல் (பீஈஜி)) கடுமையான ஒவ்வாமை உள்ளவர்கள்.
- கர்ப்பிணி பெண்கள். இதுவரை, கர்ப்பிணிப் பெண்களுக்கு தடுப்பூசி போடுவது குறித்து எந்த ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே தடுப்பூசி கர்ப்பத்தை அல்லது கருவிலுள்ள குழந்தையை எப்படி பாதிக்கிறது என்பது தெரியவில்லை.
- 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர். இதுவரை, 16 வயதிற்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடுவது குறித்து எந்த ஆய்வும் செய்யப்படவில்லை. எனவே தடுப்பூசி 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரை எப்படி பாதிக்கிறது என்பது தெரியவில்லை.





Kanton St.Gallen
Gleichstellungs- und
Integrationsförderung

எங்கே, எப்போது தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்?
தடுப்பூசிகள் போடுவதற்கு கன்டோன்களே (மண்டலங்கள்) பொறுப்பு ஆகும். செயின்ட் கேலன் கண்டோனில் (மண்டலத்தில்) தடுப்பூசி போட்டுக்கொள்வது குறித்த தகவல்களை *www.sg.ch*-இல் காணலாம். உங்கள் மருத்துவரிடமும் கேட்கலாம். அல்லது உங்கள் மருந்தகத்தில் (பார்மசி) கேட்கலாம்.

தடுப்பூசி போடுவது எவ்வாறு செய்யப்படுகிறது?
நீங்கள் மேல் கையில் (புயம்) ஒரு சிரிஞ்ச் மூலம் ஊசியைப் பெறுவீர்கள்.

நீங்கள் எத்தனை முறை தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்?
2 தடுப்பூசிகளை போட்டுக்கொள்ள வேண்டும். 1வது தடுப்பூசி போட்டுகொண்ட 4 வாரங்களுக்குப் பிறகு நீங்கள் 2வது தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டும்.

முக்கியமானது: இரண்டு தடுப்பூசிகளையும் போட்டுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நீங்கள் முடிந்தவரை நன்கு பாதுகாக்கப்படுவீர்கள்.

தடுப்பூசி எவ்வாறு பாதுகாக்கிறது?
உங்கள் உடல் வைரஸை எதிர்த்துப் போராட தடுப்பூசி உதவுகிறது. உங்கள் உடல் கோவிட் 19 வைரஸுக்கு எதிரான பாதுகாப்பை உருவாக்குகிறது. இருப்பினும், இது நடைபெற உங்கள் உடலுக்கு சில வாரங்கள் தேவைப்படும்.

2வது தடுப்பூசி போட்டுக்கொண்ட சுமார் 1 வாரத்திற்குப் பிறகு, உங்கள் உடல் கோவிட்-19 வைரஸுக்கு எதிரான பாதுகாப்பை உருவாக்குகிறது. அதன் பிறகு, உங்களுக்கு கோவிட்-19 தொற்று ஏற்படுவதற்கான ஆபத்து மிகக் குறைவாக இருக்கும்.

முக்கியமானது: தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகும் இந்த விதிகளை கடைபிடிக்கவும்: கைகளை கழுவவும். மாஸ்க்கை அணியவும். சமூக இடைவெளியை கடைபிடிக்கவும். ஏனென்றால் சிலர் தடுப்பூசி போட்டுக்கொண்டாலும் கோவிட்-19 தொற்று நோயால் பாதிக்கப்படலாம். ஆனால் பெரும்பாலான நேரங்களில், தடுப்பூசி போட்டுக்கொண்டவர்கள் தீவிரமாக நோய்வாய்ப்படுவதில்லை.

தடுப்பூசியின் விளைவு குறித்த கூடுதல் தகவல்களை தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா? அப்படியானால் *http://www.bag-coronavirus.ch/mrna* என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

தடுப்பூசி உங்களை எவ்வளவு காலம் பாதுகாக்கும்?
அது இன்னும் அறியப்படவில்லை. இருப்பினும், தடுப்பூசி உற்பத்தியாளர்கள் இது குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

ஒரு கட்டத்தில் எஃப்ஓபீஎச் மூன்றாவது தடுப்பூசியை பரிந்துரைக்கும்.

நீங்கள் போட்டுக்கொள்ளும் தடுப்பூசியிலிருந்து கோவிட்-19 நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்புள்ளதா?
இல்லை. உங்களுக்கு நீங்கள் போட்டுக்கொள்ளும் தடுப்பூசியிலிருந்து கோவிட்-19 நோய்த்தொற்று ஏற்பட வாய்ப்பில்லை. அந்த தடுப்பூசியில் கொரோனா வைரஸ்கள் எதுவுமில்லை.

தடுப்பூசி பக்க விளைவுகளை ஏற்படுத்துமா?
ஒவ்வொரு தடுப்பூசியும் பக்க விளைவுகளை ஏற்படுத்தும். இருப்பினும், பெரும்பாலான நேரங்களில், பக்க விளைவுகள் லேசானவையாக இருக்கும். மேலும் பெரும்பாலான நேரங்களில் பக்க விளைவுகள் விரைவாக மறைந்துவிடும்.

என்னென்ன பக்க விளைவுகள் ஏற்படக்கூடும்?
இந்த பக்க விளைவுகள் பொதுவானவை:
- ஊசி போடும் இடத்தில் சிவத்தல், வலி அல்லது வீக்கம் போன்றவை ஏற்படுதல்.
- தலைவலி
- சோர்வு
- தசைகள் மற்றும் மூட்டுகளில் வலி
- குளிர் அல்லது லேசான காய்ச்சல் போன்ற பொதுவான அறிகுறிகள்

இந்த பக்க விளைவுகள் உடல் கோவிட் 19 வைரஸுக்கு எதிராக பாதுகாப்பை உருவாக்குகிறது என்பதைக் காட்டுகின்றன.

கடுமையான பக்க விளைவுகள் மிகவும் அரிதானவை. கடுமையான பக்க விளைவுகளில், எடுத்துக்காட்டாக, கடுமையான ஒவ்வாமை எதிர்வினை அடங்கும். தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு வீக்கம், சிவத்தல், அரிப்பு அல்லது மூச்சுத்திணறல் ஆகியவை இதில் அடங்கும். உங்களுக்கு இதுபோன்ற அறிகுறிகள் உள்ளதா? அப்படியானால் உடனடியாக உங்கள் மருத்துவரிடம் தெரிவியுங்கள்!

பக்க விளைவுகள் எவ்வளவு காலம் நீடிக்கும்?
பொதுவாக பக்க விளைவுகள் ஒரு சில நாட்களுக்குப் பிறகு மறைந்துவிடும். ஒரு வாரத்திற்குப் பிறகும் உங்களுக்கு பக்க விளைவுகள் நீடித்திருக்கிறதா? அல்லது பக்க விளைவுகள் மோசமடைகிறதா? அல்லது நீங்கள் கவலைப்படுகிறீர்களா? அப்படியானால் உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள்.

தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?
நீங்கள் 1வது தடுப்பூசியை போட்டுக்கொண்டீர்களா? தயவுசெய்து 2வது தடுப்பூசிக்காக இப்போதே ஒரு முன்பதிவை செய்யுங்கள். 1வது தடுப்பூசி போட்டுக்கொண்ட 4 வாரங்களுக்குப் பிறகு நீங்கள் 2வது தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டும்.

முக்கியமானது: தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகும் இந்த விதிகளை கடைபிடிக்கவும்: கைகளை கழுவவும். மாஸ்க்கை அணியவும். சமூக இடைவெளியை கடைபிடிக்கவும்.

நீங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அதன் பிறகும் கூட உங்களிடமிருந்து மற்றவர்களுக்கு கோவிட்-19 நோய்த்தொற்று பரவ வாய்ப்புள்ளதா?
அது இன்னும் அறியப்படவில்லை. ஆனால் தடுப்பூசி போடப்பட்டாலும் உங்களுக்கு கோவிட் 19 தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. இருப்பினும், நீங்கள் பெரும்பாலும் நோய்வாய்ப்பட மாட்டீர்கள். அல்லது உங்களுக்கு லேசான அறிகுறிகள் மட்டுமே தோன்றக்கூடும். இருப்பினும், உங்களிடமிருந்து மற்றவர்களுக்கு வைரஸால் நோய்த்தொற்று பரவ வாய்ப்புள்ளது. எனவே, தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகும் இந்த விதிகளை கடைபிடிக்கவும்: கைகளை கழுவவும். மாஸ்க்கை அணியவும். சமூக இடைவெளியை கடைபிடிக்கவும்.

தடுப்பூசி போடுவதற்காக நீங்கள் பணம் செலுத்த வேண்டுமா?
இல்லை. இந்த தடுப்பூசி இலவசமாக போடப்படும்.

தடுப்பூசி போட்டுக்கொள்வது தனிப்பட்ட விருப்பத்துக்குரியதா?
ஆம். சுவிட்சர்லாந்தில், தடுப்பூசி போட்டுக்கொள்வது தனிப்பட்ட விருப்பத்துக்குரியது ஆகும்.

கோவிட் 19 தடுப்பூசி பற்றிய கூடுதல் தகவலை தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?
ஃபெடரல் ஆஃபிஸ் ஆஃப் பப்ளிக் ஹெல்த்தின் இணையதளத்தில் நீங்கள் கூடுதல் தகவல்களைக் காணலாம்: www.bag-coronavirus.ch/impfung. நீங்கள் ஃபெடரல் இன்ஃபோலைனை பின்வரும் எண்ணில் அழைக்கவும் செய்யலாம்: 058 377 88 92.

அல்லது உங்கள் மருத்துவரிடம் ஆலோசிக்கலாம்.

உங்கள் உள்ளூர் மருந்தகத்திலும் (பார்மசி) கூடுதல் தகவல்களை பெறலாம்.



Kanton St.Gallen
Gleichstellungs- und
Integrationsförderung